**விலங்கியல் பூங்காக்கள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விலங்கியல் பூங்காக்கள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ள யானைகளின் பெறுமதி கணக்குகளில் காட்டப்படாதிருந்தும் நீதிமன்ற கட்டளைகளின் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ள ஒரு யானையை உரிய உரிமையாளருக்கு வழங்கும் போது ரூபா 7,169,787 பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. அக்காரணத்தால் காட்சிப்படுத்துவதற்கான மிருகங்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டில் கணக்கைத் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 6,754,123 பெறுமதியான கோனபல பண்ணையில் பயிரிடப்பட்ட பயிர்கள் விலங்கியல் பூங்காக்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| நிதியத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் திறைசேரி வைப்புக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதி திறைசேரி பதிவுகளில் காட்டப்பட்டுள்ள ஆரம்ப மீதிகளை இறுதி மீதிகளுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 14,364,779 மற்றும் ரூபா 29,560,741 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2,952,854,896<br>2,957,096,088 | 2,923,294,155<br>2,942,731,309 | 29,560,241<br>14,364,779 | அடுத்து வரும் ஆண்டில் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | வித்தியாசத் திற்கான காரணத்தினை தேடிப்பார்த்து சரி செய்யப்படுதல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2019 செப்தெம்பர் 09 ஆந் திகதிய கடிதத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக விலங்கியல் பூங்காக்களில் பேணப்பட்டு வந்த கடைகள் 2019 ஏப்ரல் மாதத்திலிருந்து யூன் மாதம் வரை மூடப்பட்ட காலப்பகுதிக்குரிய கட்டணங்களை அறவீடு | திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் 2019-12-27 மற்றும் 2020-01-29 ஆம் திகதிய கடிதங்களின் மூலம் அமைச்சினூடாக அரசாங்க நிதி திணைக்களத்தின் அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தது. இன்று வரை | நிலுவையான குத்தகை வாடகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்தல் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தும் 2020 யூன் வரை அவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க ரூபா 4,782,701 தொகையான நிலுவை வாடகை 2020 யூன் வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அதற்காக பதில் கிடைக்காததனால் வாடகையினை அறவீடு செய்தல் இடம்பெற்றிருக்க வில்லை. எதிர்காலத்தில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | பெறுமதி சேர்க்கப்பட்ட வரியைக் கணிக்கும் போது ஒரு கட்டுப்பாட்டுக் கணக:கு பேணப்படாமையின் காரணமாக முன்னைய ஆண்டிற்காக பெறவேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மீதி ரூபா 4,841,740 சம்பந்தமாக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது மீளாய்வாண்டின் போது ரூபா 2,005,771 பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக முன்னைய ஆண்டிற்காக பெறவேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுமென தெரியப்படுத்தப்பட்டது. | கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்படுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

(ஆ) பெறுகை வழிகாட்டிக் கோவை

---------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 7.12.2(அ) ஆம் பிரிவு | கேள்வி மனுக்களைச் சமர்ப்பித்த ஒரேயொரு நபரினால் குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் அதிகமானதாக இருப்பின் விலையைக் குறைப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கேள்விதாரருடன் கலந்துரையாட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாததன்காரணமாக சந்தை விலையினை விட அதிக விலைக்கு அனைத்து விலங்கியல் பூங்காக்களுக்கும் கோழி இறைச்சிகள் வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக அதிக செலவு செய்ய வேண்டியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | கேள்விக்காக ஒரு கேள்வி மனு மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அக்கேள்வி மனு மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தினை விட 17% குறைவாகும். எனவே தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு கேள்வி மனுதாரருடன் கலந்தாலோசிக்கும் தேவைப்பாடு இல்லாததுடன் இக்கேள்வி மனுதாரருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்து கொள்ளும் போது சந்தையில் காணப்படுகின்ற விலைகள் தொடர்பாக கவனம் செலுத்தி தீர்மானம் எடுத்தல் வேண்டும். |
| (ii) | 3.6.2(அ) பிரிவு | மீண்டும் கட்டளை இடுவதற்கு முன்னர் வழங்குனருடன் கலந்தாலோசித்து மிகவும் சாதகமான நிலைமையைப் பெற்றுக் கொள்வதற்கு பெறுகைக் குழு அனைத்து முயற்சிகளும் எடுக்க வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது 2019 மே மாதத்தில் ஒப்பந்த காலம் முடிவடைந்த தெஹிவளை விலங்கியல் பூங்காவின் பிரதான உணவுச் சாலை 2019 யூன் மாதத்திலிருந்து மீண்டும் அந்த வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்த காலத்தினை நீடிக்கும் போது ஒப்பந்த விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. | கேள்விக் காலப் பகுதி முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் கேள்விகளைக் கோரி ஒப்பந்தம் வழங்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 7.9.2 ஆம் பிரிவு | மதிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த விலையுடன் மறுதலிப்புச் செய்த கேள்வி மனுவானது அதிக அளவில் | பின்னவல விலங்கியல் பூங்காவில் பல்வேறு உணவுகள் கேள்வியின் விலை மனுக்களை | மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போதும் வழங்குனர்களைத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டினை மிகைத்திருக்குமாயிருந்தால் அதிக கிரயத்திற்கு காரணம் என்ன என்பதனை புலனாய்வு செய்து புதிதாக கேள்வி மனுவைக் கோருவதற்காக கவனித்துப் பார்க்க வேண்டிய போதிலும், தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் 2019/2020 ஆம் ஆண்டிற்காக பல்வேறு வகையான விலங்கு உணவுகளைக் கொள்வனவு செய்வதற்காத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் கிரயத்துடன் இணங்கி கொள்ளப்பட்ட விலைகளை ஒப்பீடு செய்த போது 15 சதவீதத்திலிருந்து 129 சதவீதம் வரையான வீச்சுடைய முரண்கள் காணப்பட்டிருந்தும் அது தொடர்பாக புலனாய்வு செய்யப்படாது வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது. | மாத்திரம் கேள்வி மனுதாரருடன் கலந்தாலோசித்து குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தெரிவு செய்யும் போதும் சந்தை விலை தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகு நியமம் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டம்<br>-------------------------------- | | | |
| | (i) 37 ஆம் பிரிவு | பயன்படுத்தப்படுகின்ற நெறுத்தல் அளவைகளைப் பரீட்சிக்காதும் சீல் வைக்கப்படாதும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளுதல் தவறானது என்ற போதிலும், தெஹிவளை விலங்கியல் பூங்காவின் களஞ்சியத்தில் உள்ள இயலளவு 150 கிலோ கிராம்களான இறைச்சியின் பாரத்தை நெறுப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற இலத்திரனியல் நெறுத்தல் இயந்திரத்தில் 2013 ஆம் அண்டின் பின்னர் முத்திரை | பதில்கள் கிடைத்திருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அந்த திராசு குறைவாக பதியப்படுவதாக நெறுத்தல் அளத்தல் திணைக்களத்தால் மேற்கொண்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், இன்று வரை அது சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) 43 ஆம் பிரிவு | ஏதும் பிழைகளுடனான நெறுத்தல் அல்லது அளத்தல் உபகரணங்களைப் பயன்படுத்துதல் தவறு என்ற போதிலும், தேசிய விலங்கியல் பூங்காவில் இலைகுழைகளைக் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற 36058 தொடர் இலக்கமுள்ள தராசு சம்பந்தமாக நெறுத்தல் அளத்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட பரிசோதனையின் போது 22 கிலோகிராம் குறைவுடனான அளவை என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க உரிய தராசை பாவனையிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும், இன்று வரை அது அப்புறப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பதில் கிடைக்கவில்லை. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 73,024,137 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 448,955,427 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 375,931,290 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக சுற்றுலா பயணிகளின் வருகை குறைவடைந்தமை மற்றும் கால்நடை உணவுகளின் விலைகள் அதிகரித்தமை பிரதான காரணமாகும்.

## 2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விகிதங்களின் வகை | 2019 | 2018 |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 10 | 46 |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் (தடவைகள்) | 59 | 71 |
| சொத்துக்கள் மீதான பிரதிபலன்கள் விகிதம் / (சதவீதம்) | 1 | 7 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் குறைவடைந்திருந்ததுடன் குறுங்கால பொறுப்புக்களைத் தீர்த்துவைக்கும் இயலுமை குறைவடைந்திருந்தது. சொத்துக்கள் மீதான பிரதிபலன்கள் விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதத்தை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது பிரதானமாக விற்பனை வருமானம் குறைவடைந்தமையும் கால்நடை உணவுகளை கொள்வனவு செய்வதற்கு அதிக கிரயத்தை செலவு செய்ய வேண்டி இருந்தமையும் காரணமாக இருந்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) கால்நடைகளின் இனவிருத்தியும் பாதுகாப்பும் விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் அடிப்படைக் குறிக்கோளாக இருந்த போதிலும்,2011 ஆம் ஆண்டிலிருந்து பின்னவல யானை சரணாலயத்தில் எதுவித யானைக் குட்டிகளினதும் பிறப்பு கிடைத்திருக்கவில்லை. அதன் காரணமாக அதிக சுற்றுலா கவர்ச்சி காணப்படுகின்ற அண்ணளவாக ஒரு ஆண்டிற்கு ரூபா 03 மில்லியன் அளவான வருமானத்தை உழைக்கும் யானைக் குட்டிகளுக்கு பாலூட்டும் சந்தர்ப்பம் சுற்றுலா பயணிகளுக்கு இழக்கப்பட்டிருந்தது. | திணைக்களம் இதற்கு பரிகாரமாக பெண் யானைகளை செயற்கையாக இனப்பெருக்கும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் பொருத்தமான யானைக் குட்டிகளை வனசீவராசிகள் திணைக்களத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு முடியுமாகவிருந்தால் இந்த வருமான நிலைமையை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு முடியுமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | அடிப்படை குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உலக கால்நடை மற்றும் நீரியல் வாழ் உயிரினம் தொடர்பான அமைப்பினால் (WAZA) வழங்கப்பட்டுள்ள கால்நடை நலன்புரி மற்றும் நன்னடத்தைகளின் 10 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு உயிரினத்தை காட்டிற்கு பழக்கப்படுத்துதல் படிப்படியாகச் செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு மாற்றமாக தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்திற்குச் சொந்தமான இரண்டு யானைகள் இரண்டு சந்தர்ப்பங்களின் போது எதுவித முன் பயிற்சியும் இன்றி வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய ஹொரவப்பத்தான யானைகள் வைத்திருக்கும் நிலையத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | இந்த இரண்டு யானைகளின் நடத்தைகளுக்கு இணங்க முன் பயிற்றுவித்தல் மேற்கொள்வதற்கு முடியாத நிலைமை இருந்ததனால் இரண்டு யானைகளின் நலன்புரிக்காக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஹொரவப்பொத்தான வைத்திருத்தல் நிலையத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | உலக கால்நடை மற்றும் நீர்வாழ் உயிரினம் தொடர்பான அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள நன்னடத்தைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (இ) | இந்த இரண்டு யானைகளையும் தடுத்து வைத்திருத்தல் நிலையத்தில் சேர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் திறமையுள்ள சிறந்த உடல் நிலை மற்றும் சிறந்த சுகாதார நிலைமையினை கடந்திருந்தும் போதியளவு உணவு கிடைக்காமையின் காரணமாக 2016 ஆம் ஆண்டின் போது ஒரு யானை இறந்திருந்ததுடன் மற்றைய யானை உயிருடன் உள்ளதா அல்லது இறந்துவிட்டதா என்பது தொடர்பாக தகவல்கள் இருக்கவில்லை. | இந்த யானைகள் இறந்து விட்டன என திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை என தெரிவிக்கப்பட்டது. | உலக கால்நடை மற்றும் நீர்வாழ் உயிரினம் தொடர்பான அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள நன்னடத்தைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 16 ஏக்கர் காணியில் அமைந்துள்ள கோனபல பண்ணை, தெஹிவல தேசிய விலங்கியல் பூங்காவிலுள்ள பயிர்களை உண்ணுகின்ற மிருகங்களுக்கு தேவையான பசுமையான உணவுகளில் ஒரு பகுதியினை வழங்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டிற்காக பயிரிடப்பட வேண்டிய பயிர்கள் தொடர்பான ஒரு திட்டம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக விலங்கியல் பூங்காவின் நாளாந்த தேவைப்பாட்டை இலக்காகக் கொண்டு எதுவித பயிரும் பயிரிடப்பட்டிருக்காததுடன் பயிர்ச்செய்கை காணியானது அதிக விளைச்சலை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | பண்ணையில் பிரதானமாக C04 புற்கள் பிரசன்தா புற்கள், கங்கூன், கரும்பு வாழை என்பன பயிரிடுதல் இடம்பெற்றுள்ளதுடன் இப்பயிர் மூலங்கள் தெஹிவளை விலங்கியல் பூங்காவிற்கு வழங்குதல் இடம்பெறுகின்றது. | நிர்ணயிக்கப்பட்ட திட்டத்துக்கு இணங்க பயிர்கள் பயிரிடப்படல் வேண்டும். |
| (ஆ) | பண்ணையில் பயிர்களுக்கு சேதனப் பசளையாக யானை விட்டைகள் பயன்படுத்தப்பட்டிருந்தும் தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்காவிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட ஏனைய கழிவுப் பொருட்களும் இந்த விட்டைகளுடன் பண்ணைக்கு கொண்டு வந்து போடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் அவ்வாறு செய்யாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | நிர்ணயிக்கப் பட்டவாறு யானை விட்டைகளை கோனபல பண்ணைக்கு வழங்குதல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ரிதியகம சபாரி பண்ணையில் ரூபா 7.2 மில்லியன் தொகையில் 12 கிராமிய விற்பனை நிலையங்ள் 2018 மார்ச் 22 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தும் 2020 யூன் வரை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த விற்பனை நிலையங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | சொத்துக்களை முறையான பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிர்மாண வேலைகள் அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள ICTAD/SBD/01 ஆம் இலக்க கூற்றின் 59.2 ஆம் பிரிவின் பிரகாரம் பொறியிலாளரின் அனுமதியின்றி அல்லது 28 நாட்கள் முழுவதும் வேலைகள் நிறுத்தப்பட்டள்ள நிர்மாணங்களுக்குரிய ஒப்பந்தக்காரரின் சேவையை முடிவுறுத்த வேண்டும். அவ்வாறு இருந்தும் ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டு வந்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 11 மில்லியன் மற்றும் 2 மில்லியன் தொகைகளான சிங்கவனம் மற்றும் ஆபிரிக்க யானை வலயங்களின் செயற்திட்டங்கள் முறையே 2017 யூலை 29 ஆந் திகதி மற்றும் 2018 மார்ச் 24 ஆந் திகதிகளில் வேலைகளை முடிவுறுத்த வேண்டியிருந்த போதிலும், மேற்கூறியவாறு நடவடிக்கை எடுக்கப்படாது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. தற்பொழுது அச்செயற்திட்டங்களுக்காக முறையே ரூபா 2.3 மில்லியன் மற்றும் ரூபா 1.7 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளன. | ஆபிரிக்க யானை வலய செயற்திட்டத்தை பூர்த்தி செய்தலை விரைவாக செய்து கொள்ள முடியாதுவிடின் அச்செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளை நிறுத்தி மற்றுமொரு ஒப்பந்தக்காரருக்கு வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். சிங்கவனம் செயற்திட்டம் தற்பொழுது 60 சதவீதம் அளவிலானவை நிர்மாணிக்கப்பட்டுள்ளதனால் தேசிய இயந்திரங்கள் நிறுவனத்தின் மூலம் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |